**CHENNAI METROPOLITAN DEVELOPMENT AUTHORITY**
Thalamuthu Natarajan Building, No.1, Gandhi Irwin Road, Egmore,
Chennai - 600 008
Phone : 28414855 Fax: 91-044-28548416
E-mail: mscmda@vsnl.com
Web site: www.cmdachennai.gov.in

## செய்தி குறிப்பு

சென்னை பெருநகர எல்லைக்குள் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களை கட்டுபடுத்தும் முயற்சியில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் **9.4.2010** அன்று மேலும் இரண்டு கட்டிடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன்படி .பூட்டி சீல் வைக்கப்பட்டது.

**(1) முதலாவது கட்டிடம் பழைய கதவு எண் 14, புதிய எண் 29, கடப்பா ரங்கய்யா தெரு, பெரிய மேடு, சென்னை –600 003–**ல் அமைந்துள்ளது. இக் கட்டிடத்தின் உரிமையாளர் சென்னை மாநகராட்சியிடமிருந்து 20.2.2007 அன்று தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய அலுவவக கட்டிடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி பெற்றுள்ளார். ஆனால், தரைதளம் மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட தங்கும் விடுதியாக கட்டியுள்ளார். எனவே இக்கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளத்தில், ஒப்பளிக்கப்பட்டதிலிருந்து வேறுபட்டும், கூடுதலாக நான்கு தளங்கள் அனுமதியின்றியும் கட்டப்பட்டு உள்ளது.

**(2) இரண்டாவது கட்டிடம் பழைய கதவு எண் 11, புதிய எண் 2, கடப்பா ரங்கய்யா தெரு, பெரிய மேடு,** சென்னை–600 003–ல் அமைந்துள்ளது. இக் கட்டிடத்தின் உரிமையாளர் சென்னை மாநகராட்சியிடமிருந்து 16.8.2007 அன்று தரைதளம் மற்றும் முதல் தளத்துடன்கூடிய வணிக கட்டிடம் (கடைகள்) கட்டுவதற்கான திட்ட அனுமதி பெற்றுள்ளார். ஆனால் தரைதளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட தங்கும் விடுதியாக கட்டியுள்ளார். எனவே இக்கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளத்தில், ஒப்பளிக்கப்பட்டதிலிருந்து வேறுபட்டும், கூடுதலாக மூன்று தளங்கள் அனுமதியின்றியும் கட்டப்பட்டும் உள்ளது. மேலே உள்ள மூன்று தளங்கள் தற்போது பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. தரைதளம் மற்றும் முதல் தளத்தை காலி செய்து, சீல் வைக்க நடிவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**உறுப்பினர்–செயலர்**